**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 583 of 2017

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : கணேசன்

Father's Name : குமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of April** 2026.

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது கோவை மாவட்டம் தென்னம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு வீட்டில் இருந்து வருகிறேன். தேதி மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக இரவு சுமார் 08.30 மணிக்கு பேபி என்னுடன் வீட்டில் அருகே நானும் குமார் என்பவரும் நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது, அங்கே மூன்று போலீசார் வந்திருந்தார்கள். நான் என்னவென்று போலீசாரிடம் கேட்க காணாமல் போன பொருள் சம்பந்தமாக விசாரிக்க வந்திருப்பதாக கூறினார்கள். நானும் சொல்லிவிட்டு கிளம்பலாம் என சென்ற பொழுது போலீசார் என்னிடம் பேப்பர் கொடுத்து கையொப்பம் செய்யுமாறு கூறினார்கள். நான் எதற்காக கையொப்பம் செய்ய வேண்டும் என கேட்டேன். போலீசார் நாங்கள் வந்ததற்காக கையொப்பம் செய்யுமாறு கூறினார்கள். நானும்

கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறதுபோலீசார் என்ன விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 19.06.2016ம் தேதி இரவு 9 மணி அளவில் நானும் சுப்பண்ணன் என்பவரும் நின்று சம்பவ இடத்தின் அருகே பேசிக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்த கருமத்தம்பட்டி காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையின் பொழுது கூறிவிட்டு தற்பொழுது போலீசார் வெள்ளை பேப்பரில் கேட்டுக் கொள்வதற்கான கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல .

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**